விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 271 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 30 சனிக்கிழமை (16.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தமிழர் விடயத்தில் நடுநிலையாளராக இந்தியா செயற்பட வேண்டும் - சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

ஈழத் தமிழர் விடயத்தில் முதல் நிலை நடுநிலையாளராக இந்தியா செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்புபாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தியாகதீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலின் முதல் நாள் நிகழ்வு நேற்றுக் காலை அக்கராயன் பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரை யாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 36 ஆண்டுகளுக்கு முன் திலீபனினால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளும் இன்று வரையும் நிறைவேற்றப்படா 15

## பாராளுமன்றம் அனுமதித்தால் மட்டுமே 13 ஆம் திருத்தத்தை ரணில் அமுலாக்குவார்

### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

**பாராளுமன்றம் அனுமதித்தால் மட்டுமே 13ஆம் திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி ரணில் அமுலாக்குவார் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் 15

## வடமராட்சியில் றோலர் படகு தீக்கிரை



15

## கைதடியில் மயங்கி விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் பேருந்தில் இருந்து இறங்கியவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது,

இதில் மட்டுவிலைச் சேர்ந்த மாணிக்கவாசகர் சதீஸ்குமார் (வயது-49) என்பவரே உயிரிழந்தவராவார். 15

## தமிழர் தாயகத்தில் திலீபன் நினைவேந்தல் ஆரம்பம்



03

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு தற்காலிகமாக நிறுத்தம்

### ஒக்ரோபர் 30ஆம் திகதி அகழ்வு மீண்டும் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த அகழ்வுப் பணியானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என முல்லைத்தீவு நீதவான் நீதிபதி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு 15



## மதவாச்சி பொலிஸ் பிரிவில் 25 வயது இளைஞன் அடித்துப் படுகொலை

(வவுனியா)

மதவாச்சி பொலிஸ் பிரிவில் 25 வயது இளைஞன் ஒருவர் பொல்லால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவுமதவாச்சிபொலிஸ் பிரிவின் கனந்தராதி வுள்வெவ பகுதியி 15

## பொலிஸாரை தாக்கியவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து, பொலிஸ் உத்தியோகஸ்தரை தாக்கிய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 16

## கிளிநொச்சியில் கசிப்பு கும்பலை துரத்திச் சென்றவேளை காணாமல்போன பொலிஸார் நேற்று சடலமாக மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் காணாமல்போன பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்ற அறிவித்தல்

யுவசக்தி வீதி சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த இராசமணி (465323469v) ஆகிய நான் 16.09.2023 இன்று முதல் எனது பெயரை தவமணி எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
தவராசா தவமணி

(17093)


## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) (C-7260)

**021 222 1265,076 250 0098**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**

## NORTH LANKA IIT CITY CAMPUS

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம்.
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC), UNESCO, IAU மற்றும் WHED யின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களினால் சான்றிதழ் வழங்கப்படும்.

### புதிய பிரிவுகள் ஆரம்பம்
### 16.09.2023 சனிக்கிழமை
### காலை 10.00 மணி

- **Bachelor of Education**
  Top-Up - 1 Year
  தகைமை : Teacher's Training College / Diploma in College of Education
- **Bachelor of Education**
  3 Years
  தகைமை : A/L 3 Passes
- **Master of Education**
  1 Year
  தகைமை : Bachelor of Education / Post Graduate Diploma in Education



North Lanka IIT
Top Floor,
People's Bank Building,
Stanley Road,
Jaffna.

Telephone No :
Rector 0767504535
Registrar 0778849677



(C-7264)




## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

### பகிரங்க ஏலம் விடுதல்
### ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல்
### காலபோகம் - 2023/2024

எமது கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான 20 1/4 (இருபதேகால் ஏக்கர்) வயல் காணிகள் எதிர்வரும் 17.09.2023ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு (ஞாயிற்றுக்கிழமை) ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

I. மருதநகர் 2 1/4 ஏக்கர்
II. பெரியபரந்தன் D/6 8 ஏக்கர்
III. பெரியபரந்தன் LB2/ D/5 10 ஏக்கர்

குறிப்பு

I. ஏலம் எடுப்பவர்கள் அன்றைய தினம் பி.ப 1.00 மணியளவிற்கு முன் முழுப்பணத்தையும் செலுத்த வேண்டும். தவறின் அடுத்ததாகவுள்ள விவசாயிக்கு காணி வழங்கப்படும்.
II. ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறி முழு வயல் குத்தகை பெறுமதி கணிக்கப்படும்.
III. காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.
IV. சகல விவசாயிகளின் நேர காலத்தை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு மு.ப 10.00 மணிக்கு ஏலம் கூறப்படும்.

| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | சு.வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| 077 602 7147 | 077 540 7448 | 077 016 7716 |

(C-7262)

# மரண அறிவித்தல்

## செல்வன்
## சுமந்திரன் அபிஷனன்
### (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன்)



பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுமந்திரன் அபிஷனன் அவர்கள் நேற்று (15.09.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட சுமந்திரன் - ரவீந்திரகுமாரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் சுமந்திரன் ஆர்த்திகனின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சாவகச்சேரியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மற்றும் ரதிமலர் மற்றும் இரத்தினதுரை யோகராணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல் : குடும்பத்தினர்
[illegible]

(17094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல்







(யாழப்பாணம்)


ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் ஆரம்பமானது.

முன்னாள் போராளியான விடுதலை பொதுச் சுடர் ஏற்றியதை தொடர்ந்து, மலர் மாலை அணிவிக்கப்பட்டு தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி-6-33-104)

## மருத்துவ பீட வளாகத்திலும் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி







(அராலி)

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் எற்பாட்டில் தமிழரின் உரிமைக்காக உண்ணாவிரதம் இருந்த தியாக தீலிபனின் 36 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்து பீட மாணவ ஒன்றிய தலைவர் தலைமையில் இடம்பெற்றது. (நி-33-104)

## கிளிநொச்சியிலும் அஞ்சலி

(தருமபுரம்)

அக்கராயன் அம்பலப் பெருமாள் சந்தியில் அமைந்துள்ள, அக்கிராச மன்னனின் உருவச் சிலை முன்றலில், கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் உறுப்பினர் சுந்தரமூர்த்தி தயாபரன் தலைமையில் நடை





பெற்ற தியாக தீபம் திலிபனின் நினைவேந்தல் நிகழ்வில் மத குருமார், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பிரதேச சபைகளின் மேனாள் உறுப்பினர்கள், அக்கராயன், கந்தபுரம் பிரதேச சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (நி-6-316)

## கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரம்

# உண்மைகள் வெளிவர வேண்டும்

## அரசாங்கம் உறுதியாகவுள்ளது என்கிறார் நீதி அமைச்சர்

(கொழும்பு)

**முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள் வெளிவர வேண்டும். இந்த விடயத்தில் அரசு அக்கறையுடன் செயற்படுவதனால்தான் அகழ்வாய்வுக்கென நிதியையும் ஒதுக்கியுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் நாள்தோறும் எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டு வருகின்ற நிலையில், இது தொடர்பில் நீதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நீதிபதியின் மேற்பார்வையின் கீழ் கொக்குத்தொடுவாய் [illegible] புதைகுழியில் அகழ்வாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த புதைகுழியிலிருந்து மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் தடயப் பொருட்களும் மீட்கப்பட்டு வருகின்றன.

[illegible] தொகுதிகள் தொடர்பிலும், தடயப் பொருட்கள் குறித்தும் தற்போது என்னால் கருத்துரைக்க முடியாது.

அதேவேளை, அகழ்வாய்வு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா அல்லது மீட்கப்பட்ட மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளின் [illegible] கட்ட பகுப்பாய்வு நடவடிக்கைகள் என்னவென்று நீதிமன்றம் தான் முடிவெடுக்க வேண்டும். எனினும், இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள் வெளிவர வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

# பெண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி சம்பியன்

அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் 2023 பெண்களுக்கான பூப்பந்தாட்ட தொடரில் சம்பியனாகியது கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி.

அரச அதிபர் வெற்றிக் கிண்ண போட்டித்தொடரில் நேற்று முன்தினம் பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் கிளிநொச்சி மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

போட்டித்தொடரின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த பெண்களுக்கான பூப்பந்தாட்ட தொடரில் சிறப்பாக விளையாடி கிளிநொச்சி மாவட்டச் செயலக பெண்கள் அணி சம்பியனாகியது. இரண்டாம் நிலையினை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி பெற்றுக் கொண்டது.

அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் ,2023 போட்டிகளில் சிறப்பாக பங்குபற்றி இது வரையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் 44 புள்ளிகளை பெற்று தொடர்ந்தும் முதலிடத்திலுள்ள அதேவேளை பூநகரி பிரதேச செயலகம் 27புள்ளிகளை பெற்று இரண்டாம் நிலையிலுள்ளது.

இதேவேளை கல்வித் திணைக்களம் 20 புள்ளிகளையும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் 17 புள்ளிகளையும் கரைச்சி பிரதேச செயலகம் 14 புள்ளிகளையும் சுகாதாரத்திணைக்களம் 10 புள்ளிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

# ஐ.சி.சி ஒரு நாள் தரவரிசை இந்திய வீரர்கள் முன்னேற்றம்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலை கடந்த புதன் கிழமை வெளியிட்டிருந்தது.

இதில் ஒரு நாள் போட்டிகளின் பட்ஸ் மேன்கள் தரவரிசையில் இந்திய வீரர்கள் நல்ல முன்னேற்றம் கண்டு ள்ளனர். ஒருநாள் போட்டிகளின் பட்ஸ்மேன்கள் தரவரிசையில் பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாம் முதலிடத்தில் தொடருகிறார். இந்திய வீரர் சுப்மன் கில் 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தற்போது நடந்து வரும் ஆசிய கோப்பை தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதால் அவர் 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விராட் கோலி சதமடித்ததன் மூலம் இந்திய வீரர் விராட் கோலி 8 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். ஆசிய கோப்பை தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இந்திய அணி கப்டன் ரோகித் சர்மா 9 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். (நி-6)

# யாழ்.பல்கலை பெண்கள் அணி பளுதூக்கல் போட்டியில் சம்பியனானது

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 14 ஆவது மினிஒலிம்பிக் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக பெண்கள் பளுதூக்கு அணி 5 தங்கம் , 2 வெள்ளி, 1 வெண்கல பதக்கம் என 8 பதக்கங்களை பெற்று இவ் வருட சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது.





இவ் வருடமே முதன் முதலாக பெண்கள் பளு தூக்கல் அறிமுகப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதேவேளை ஆணொருவரும் தங்க பதக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

என்.மிதுசா 49 கிலோ எடை பிரிவில் 90 கிலோ எடையினை தூக்கி தங்க பதக்கமும்,

கே.சனுஜா 49 கிலோ எடை பிரிவில் 71 கிலோ எடையினை தூக்கி வெள்ளி பதக்கமும் எச்.ஏ.ஐ.என். ரத்ன நாயக்க 55 கிலோ எடை பிரிவில் 100கிலோ எடையினை தூக்கி தங்க பதக்கமும் ஜே. பஜினா 64 கிலோ எடை பிரிவில் 120 கிலோ எடையினை தூக்கி வெள்ளி பதக்கமும் ஆர். தசாந்தினி 76 கிலோ எடை பிரிவில் 110 கிலோ எடையினை தூக்கி தங்க பதக்கமும் ஆர்.தக்சாயினி 81 கிலோ எடை பிரிவில் 100 கிலோ எடையினை தூக்கி தங்க பதக்கமும் டி.எம். டி.எம்தனபால 87 கிலோ எடை பிரிவில் 79 கிலோ எடையினை தூக்கி வெண்கலப் பதக்கமும் எஸ். ஜீவமலர் +87 கிலோ எடை பிரிவில் 80 கிலோ எடையினை தூக்கி தங்க பதக்கமும் மற்றும் ஆண்கள் பளுதூக்கல் பிரிவில் ரி. நர்மதன் 89 கிலோ எடை பிரிவில் 195 கிலோ எடயினை தூக்கி தங்க பதக்கத்தினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# திரில் வெற்றி இறுதிப்போட்டியில் இந்தியாவுடன் மோதவுள்ள இலங்கை அணி

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சூப்பர் 4 சுற்றில் இலங்கை, அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் பாகிஸ்தான், இலங்கை அணிகள் மோதின.

மழை குறுக்கிட்டதால் போட்டி 42 ஓவராகக் குறைக்கப்பட்டது. டாஸ் வென்ற பாகிஸ்தான் பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 42 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 252 ரன்கள் சேர்த்தது. முகமது ரிஸ்வான் 86 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தொடக்க ஆட்டக்காரர் அப்துல்லா ஷபிக் அரை சதமடித்து 52 ரன்னில் அவுட்டானார். இலங்கை சார்பில் பதிரனா 3 விக்கெட்டும், மதுரஷன் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.



இதையடுத்து, டக்வொர்த் லூயிஸ் முறைப்படி 42 ஓவரில் 252 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை களமிறங்கியது. குசால் மெண்டிஸ் நிதானமாக ஆடி அரை சதமடித்தார். 3 ஆவது விக்கெட்டுக்கு இணைந்த குசால் மெண்டிஸ், சமர விக்ரமா ஜோடி 100 ரன்கள் சேர்த்தது.

அரை சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சமரவிக்ரமா 48 ரன்னில் அவுட்டானார். குசால் மெண்டிஸ் 91 ரன்னில் வெளியேறினார். கடைசி கட்டத்தில் அசலங்கா அதிரடியாக ஆடி 49 ரன்னுடன் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். இறுதியில், இலங்கை அணி கடைசிப் பந்தில் 252 ரன்களை எடுத்து திரில் வெற்றி பெற்றதன் மூலம் பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கும் முன்னேறியது.

பாகிஸ்தான் சார்பில் இப்திகார் அகமது 3 விக் கெட்டும், ஷகின் அப்ரிதி 2 விக்கெட்டும் கைப்பற்றினர். நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள இறு திப் போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எம்.எப் இன்
# அடுத்த கட்ட உதவியை பெறுவதில் சிக்கலில்லை

## ஷெஹான் சேமசிங்க



(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வதற்கு எவ்வித சிக்கல்களும் ஏற்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட இந்த கடன் திட்டத்திலிருந்து இடையில் விலகுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் ஆரம்பித்த மீளாய்வு கலந்துரையாடல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு இடம்பெறும்.

இந்த கலந்துரையாடல் நிறைவடைந்ததன் பின்னர் ஐ எம் எப் இன் இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் வெளிநாட்டு நிதி சந்தையில் பிரவேசிப்பதற்கான சக்தியை தான் சர்வதேச நாணய நிதியம் இதனூடாக நமக்கு பெற்றுத் தருகின்றது.

அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் எங்கள் கடமைகளை நிறைவேற்றி இருக்கின்றோம்.

சில விடயங்களில் நீதிமன்ற செயற்பாடுகள் இடம்பெற்றமையால் சில சட்டமூலங்களை நிறைவேற்ற சிறிது தாமதம் ஏற்பட்டது.

இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக் கொள்ளவும் அதனூடாக முன்னோக்கி செல்லவும் எமக்கு எந்த பிரச்சினைகளும் ஏற்படாது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட இந்த கடன் திட்டத்திலிருந்து இடையில் விலகுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை.

2024 ஆம் ஆண்டில் இருந்து பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணிக்க எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

## இலங்கையின் அடுத்த ஜனாதிபதி சஜித் மகிந்தவின் ஆஸ்தான சோதிடர் தகவல்

(கொழும்பு)
இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நியமிக்கப்படுவார் என ராஜபக்ஷ குடும்பத்தின் ஜோதிடரும் முன்னாள் அரச சோதிடருமான சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சஜித் நிச்சயம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார். கஜகேசரி எனும் சக்தி வாய்ந்த ராஜயோகம் அவரது ஜாதகத்தில் இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த முறை தேர்தல் ஒன்று வைத்திருந்தால் 8 ஆவது ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸவே செயற்பட்டிருப்பார். எனினும் தேர்தல் வைக்காமல் இருந்தமையினால் சஜித்தினால் ஜனாதிபதியாக முடியவில்லை.

எனினும் நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக சஜித் பதவி ஏற்பதற்கு அனைத்து பலன்களும் உள்ளது.

இதனால் என்னால் உறுதி யாக கூற முடியும். இந்த நாட் டின் அடுத்த ஜனாதிபதியாக சஜித் நியமிக்கப்படுவார்.

தந்தை ரணசிங்க பிரேமதாஸவை போன்று சஜித் நாட்டை ஆழ்வார் என சோதிடர் சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். (நி-6)

# கியூபா ஜனாதிபதியை சந்தித்தார் ரணில்

(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கியூபா ஜனாதிபதி மிகுவல் டியெஸ்-கனெல் பெர்மு டெஸ்க்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கியூபாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)



## முருகன், நளினி உள்ளிட்டோர்
# ஆவணங்கள் கிடைத்தவுடன் இலங்கைக்கு அனுப்பப்படுவர்

(சென்னை)
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான முருகன், நளினி உள்ளிட்ட 4 பேரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சென்னை உயர்நீதி மன்றத்தில் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த 4 பேரின் கடவுச்சீட்டு உள்ளிட்ட பயண ஆவணங்கள் கடந்த டிசெம்பர் மாதத்தில் இந்தியாவிற்கான இலங்கை துணை தூதரகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும் பயண ஆவணங்கள் கிடைத்தவுடன் 4 பேரும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள்எனவும்மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# இராசிபலன்

16.09.2023
ஆவணி 30, சனிக்கிழமை
பிரதமை முற்பகல் 9.19 மணிவரை

உத்தரம் முற்பகல் 8.34 மணிவரை
சுபநேரம் -3.03-4.33 மணிவரை
இராகுகாலம்-9.03-10.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
சதயம், பூரட்டாதி.

வளவன்

**மேஷம்**
நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கூடும், கடன்களை வசூலிக்கும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கடகம்**
வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பாசத்தோடு பழகிய வர்களின் எண்ணிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்**
குடும்பத்தினரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மகரம்**
மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இனிமை தென்படும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்**
வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்**
மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, வேலைச் சுமை கூடும் நாள்.

**மிதுனம்**
தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி**
குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு**
செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**மீனம்**
குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

இளமையில் முகம் அழகு, முதுமையில் ஆன்மா அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் வழங்கப்பட்டும் குடியேற முடியவில்லை

## பலாலி மக்கள் விசனம்

(மன்னார்)

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் தமக்கு குறிப்பிட்ட அளவு காணிகள் விடுவிக்கப் பட்டுள்ள போதும் அவற்றில் குடியேறும் வகையில் வீடு களை அமைக்க அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக் கைகளையும் முன்னெடுக்க வில்லை என வலிகாமம் வட க்கு பலாலி மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதா ரண சூழ்நிலை காரணமாக வலி வடக்கு பலாலி கிராம மக்கள் தமது சொந்த நிலங் களில் இருந்து 1990 ஆம் ஆண்டு பாதுகாப்புக் காரணங் களுக்காக இடம்பெயர்ந்து பல் வேறு இடைத்தங்கல் முகாம் மற்றும் உறவினர்கள் வீடு களில் வாழ்ந்து வந்தனர்.

தாம் வசிப்பதற்கு காணிகள் வழங்குமாறு பல்வேறு ஆர்ப் பாட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில் சுமார் 33 வருடங்களின் பிற்பாடு பலாலி வடக்கு (J/254) கிராம அலு வலர் பிரிவில் காணி அளவீடு செய்யப்பட்டு மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் தமது சொந்த பூர்வீக காணிகள் இதுவரை விடுவிக் கப்படவில்லை என அந்த மக் கள் ஆதங்கம் தெரிவித்துள்ள தோடு அக்காணிகள் படையி னர் வசம் உள்ளதாகவும் தெரி வித்துள்ளனர். சுமார் 33 வரு டங்கள் முகாம்களில் இருந்து பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்ததால் முகாம் களில் இருந்து முதலில் வெளியே வர வேண்டும் என்ற நோக் கத்துடன் இக் காணிகளை பெற்றுக்கொள்ள சம்மதம் தெரி வித்ததாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

5 முகாம்களை சேர்ந்த 49 குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் 45 குடும்பங்களு க்கு காணிகள் வழங்கப்பட்டுள் ளது. ஏனைய 4 குடும்பங்க ளுக்கு காணி வழங்க நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரி விக்கின்றனர். 45 குடும்பங்க ளுக்கும் 13 1/2 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இந்து கோவிலுக்கு 10 பரப்பு காணி யும், பாடசாலைக்கு என 2 ஏக் கர் காணியும் ஒதுக்கப்பட் டுள்ளதோடு ஒரு குடும்பத்திற்கு தலா 2 பரப்பளவு காணி ஒதுக் கப்பட்டுள்ளது.

மீள் குடியேற்றத்துக்கு என வழங்கப்பட்டுள்ள காணியில் மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்க கூடிய நிலை காணப் படுவதாகவும் மக்கள் வசிப்ப தற்கு ஏற்றதாக இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த காணியில் மக்கள் வசிப்பதாக இருந்தால் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் குறிப் பாக காணிகளுக்கு சுற்று வேலி அமைத்தல் தற்காலிக கொட் டகைகள் அமைத்தல், குடிநீர் வசதி, மலசல கூட வசதி மற் றும் மின்சார வசதிகள் உட னடியாக ஏற்படுத்த வேண்டும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களால் குறித்த நடவடிக் கைகளை முன்னெடுக்க முடி யாது. எனவே அதற்கான உத விகளை அரசாங்கமும், அரச சார்பற்ற அமைப்புகளும் முன் வந்து வழங்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (நி-4-5-285)



முல்லை மலர் அபி விருத்தி அமைப்பினால் 130 பயனாளிகளுக்கு வாழ்வாதார சுழற்சி முறை கடன் திட்டம் கடந்த 13 ஆம் திகதி முல்லைத்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் வழங்கப்பட் டது.

(படம்- சதீஸ்)

# யாழில் இடம்பெறும் குற்றங்களை 10 நாட்களுக்குள் கட்டுப்படுத்துக

## டக்ளஸ் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் மணல் கடத்தல், கால் நடைகள் கடத்தல் மற்றும் ஏனைய குற்றச் செயல்களை 10 நாட்களுக்குள் கட்டுப்படுத்து மாறு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தர விட்டுள்ளார்

யாழ்ப்பாணம் மாவட்டச்செய லகத்தில், நேற்று வெள்ளிக்கி ழமை, யாழ்குடா நாட்டில் அண் மைய நாட்களில் இடம் பெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல், கால்நடைகள் கடத்தல் உள்ளிட்ட ஏனைய சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பாக ஆரா யும் விசேட கூட்டம் கடற்தொழில் அமைச்சர் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிலையிலேயே 10 நாட்களுக்குள் குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்த வேண் டும் என்ற தீர்மானம் எடுக் கப்படது. (4-5-33)

# சங்கானைப் பகுதியில் கசிப்புடன் நபர் கைது!

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரி விற்குட்பட்ட சங்கானை தேவா லய வீதி பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து இரண்டு லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மானிப்பாய் பொலிஸார் நேற்று மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னரும் கசிப்புடன் கைதா னவர் என பொலிஸார் தெரி வித்துள்ளனர். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற் படுத்து வதற்கான நடவடிக்கை களை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

# சீரடி சாயிநாதனின் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஈழுத்து சீரடி சாயி நாதனின் வருடாந்த திவ்ய அலங்கார உற்சவப் பெருவிழா, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 400 |
| தக்காளி | 200 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 160 | 150 | 160 | 200 |
| கரட் | 350 | 380 | 300 | 300 |
| பூசணி | 100 | 80 | 70 | 80 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 260 | 250 | 90 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200-100 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 80 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 360 | 160 | 250 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 | 150 |
| பீற்றூட் | 180 | 140 | 160 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 350 | 400 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 800 | 800 | 1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 600 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 280 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 70 | 50 | 120 |

# ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி ஊரும் உறவும் அமைப்பின் ஐக்கிய சமூக மேம் பாட்டு ஆண்டு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புலோலி வட கிழக்கு வீனஸ் விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஊரும் உறவும் அமைப்பின் தலைவர் மா.லோகசிங்கம் தலைமையில் இடம்பெற வுள்ள நிகழ்வில், பிரதம விருந் தினராக வவுனியா பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி.த.இராஜகோபு கலந்து கொள்ளவுள்ளார். (4-5)

# தரம்-5 மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் மற்றும் மானிப்பாய் பரிஸ் லியோ கழகம் ஆகியன இணை ந்து சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 2023 ஆம் ஆண்டு புலமைப் பரி சில் பரீட்சைக்குத் தோற்று கின்ற மாணவர்களுக்கு கருத்தரங்கை நடத்த ஏற் பாடு செய்துள்ளது.

அதற்கமைய கருத்தரங் கானது நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை மானிப் பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற வுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த இரு கழகங்க ளும் இணைந்து "கல்வியே வாழ் வின் வழிகாட்டி" என்ற திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கையும் கல்வி சார் செயற்றிட்டங்களை யும் முன்னெடுத்து வரு கின்றமை குறிப்பிடத்தக் கது. (4-5)

# சவுக்கம் காட்டிற்கு விஷமிகள் தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி - மணற்காடு சவுக்கம் காட்டில் நேற்று முன்தினம் பிற்பகல் விஷ மிகளால் தீ வைக்கப்பட் டுள்ளது.

இதனால் அங்குள்ள பல சவுக்கம் மரங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. அதனையடுத்து பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீப்பரவலைக் கட்டுப்படுத்தினர்.

மணற்காடு-சவுக்கம் காட்டில் விஷமிகளால் தீ வைக்கப்பட்டு அதன்பின்னர் அங்கிருந்த சவுக்கம் மரங் கள் வெட்டப்பட்டு விற்பனை செய்யும் நடவடிக்கைகள் பல வருடங்களாக இடம் பெற்று வருகின்றன. எனவே இத்தகைய செய லைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் 9 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றார் தர்மன் சண்முகரத்தினம்



(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள இலங்கையை பூர்வீகமாக கொண்ட தமிழரான தர்மன் சண்முகரத்தினம் நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

சிங்கப்பூரில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று தர்மன் சண்முகரத்தினம் வெற்றி பெற்றார்.

இதனையடுத்து, சிங்கப்பூரின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அவர் தெரிவானார்.

ஜனாதிபதிக்கான பதவியேற்பு நிகழ்வுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் சிங்கப்பூரின் 9 ஆவது ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்தினம் பதவியேற்று கொண்டார்.

அவருக்கு சிங்கப்பூர் உயர் நீதிமன்றில் தலைமை நீதிபதி சுரேஷ் மேனன் பதவி பிரமாணம் செய்து வைத்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

### தொடரும் வறட்சியான காலநிலை

# வில்பத்து சரணாலயத்தில் நீரின்றித் தவிக்கும் விலங்குகள்

(கொழும்பு)

வறட்சியான காலங்களில் விலங்குகள், பறவைகள் நீர் அருந்துவதற்காக வனவிலங்கு அதிகாரிகளினால் வில்பத்து சரணாலயத்தில் ஆங்காங்கே குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

விலங்குகள் மற்றும் பறவைகள் நீர் அருந்துவதற்காக 3 நாட்களுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டுள்ள குட்டைகளுக்கு வாகனங்களில் சென்று நீர் ஊற்றி வருவதாக எலுவாங்குளம் வில்பத்து சரணாலய வனவிலங்குத் திணைக்களத்திற்கு பொறுப்பான அதிகாரி ஜயவீர தெரிவித்தார்.

இதனால் குறித்த குட்டைகளில் விலங்குகள் மற்றும் பறவைகள் நீர் அருந்தி தாகத்தை தீர்ப்பதாக அவர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக விலங்குகள் மற்றும் பறவைகள் நீர் அருந்துவதற்கு நீரைப் பெறும் கலா ஓயா ஆற்றின் நீரின் மட்டமும் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ் (PR இல்லை)<br>எதிர்பார்ப்பு: பிரான்சில் PR உள்ளவர்<br>தொ.இ: B/13919 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>உயரம்: 152 cm<br>தகைமை/தொழில்: காசாளர் (கனடா)<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ:G/13909 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 21 3/4<br>உயரம்: 5' 7<br>தகைமை/தொழில்: IT, engineering (Australia)<br>எதிர்பார்ப்பு: IT, engineer, படித்த பெண்<br>தொ.இ: B/13921 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்:A/L மருந்தாளர் (pvt)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ளவர்<br>தொ.இ: G/13911 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம் : பரணி 7 இல் செவ்வாய்<br>கி.பா: 36<br>உயரம்: 5' 8<br>தகைமை/தொழில் Law, LLM (Reading) அரச சட்டவாதி<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி, உயர்பதவியிலுள்ளோர்.<br>தொ.இ: B/13923 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 1/4<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: Cima<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு/ உத்தியோகம்<br>தொ.இ:G/13912 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 71<br>உயரம் : 172 cm<br>தகைமை/ தொழில்: BSc (Hons), Qs Architectueal Visualizer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்.<br>தொ.இ: B/13928 | பிறப்பு: 1995 RC<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>உயரம் : 158 cm<br>தகைமை/தொழில்: A/L pvt Company<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13913 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24, மார்டின் வீதி, ஆதன இல 18/13, 18/14, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சந்திரகுலசிங்கம் எதிர்மனசிங்கம் சொலமன் ஜோன் மாசில்லாவின் உரித்தாளரும் என்ற பெயரில் யாழ்.மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் ஜோசப் அந்தோனி நீக்லஸ் சவிரிமுத்துவும் மேரி யோசப்பின் சவிரிமுத்துவும் 27.08.1960 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு F.E.R வன்னித்தம்பி முகதாவில் 717 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் அவரது மகளான மார்ஜர்மரீனா அன்ரனஸ் சவிரிமுத்து சாமுவேல் பீட் ஜோசப் புவிமானசிங்கி என்பவருக்கு விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் வழக்கு இல. ஈடு/8016 விற்பனவிற்கான கட்டளைக்கமைய சோமசுந்தரம் நாசிங்கம் 1968.11.23 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J.பற்றிக் முகதாவில் 3050 ஆம் இலக்க உறுதி மூலம் ஜோன்பிள்ளை தைரியர் என்பவருக்கு விற்றுள்ளார். யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த ஜோன்பிள்ளைக்கு விற்றுள்ளனர்.

குறித்த ஆதனம் கனடாவில் வசிக்கும் தைரியர் றொபின்சன், தைரியர் கரிசன், தைரியர் டெரிசன், தைரியர் ஜஸ்மின், தைரியர் சேறின், தைரியர் விக்ரறின், மற்றும் தைரியர் லினந் ஆகியோரின் அற்றோனியத் தத்துவக்காரரான அன்ரனற் பேர்ளின் சாமிநாதர் 17.07.2020 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1174 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அற்றிக் பிரசாந் சாமிநாதருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் சாமுவேல் பீட்ஜோசெப் புவிமனசிங்கி கைம்பொன் மார்ஜரி மரீனா அன்ரனற் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கு இல காணி/596/2017 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரமும் தனது சீதனமும் என வெளிப்படுத்தி 01.03.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தக்ஷாமினி முகாதாவில் 490 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மரியதாஸ் அடைக்கலதாசும் பெண் கலாஞானி என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

அதன் பின்னர் சொரியலாக காணப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 4.76 இனை முதலாம் பகுதியாக 3/4 பங்கினை (நிலப்பரப்பு 2 குளி 8.08) நிந்தமாக மரியதாஸ் அடைக்கலதாஸ் பெண் கலாராணியும் மிகுதியினை (குளி 14.68) 2 ஆம் பகுதியாக அற்றிக்பிரசாத் சாமிநாதருக்கு 24,04,2022 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1989 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

பின்னர் 24.04.2022 ஆம் திகதியிட்ட பிரசித்த தொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1989 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் சொரியலாக காணப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 4.76 இனை முதலாம் பகுதியினராக 3/4 பங்கினை நிந்தமாக (நிலப்பரப்பு 2 குளி 8.08) மரியதாஸ் அடைக்கலதாசும் பெண் கலாஞானியும் மிகுதியினை (குளி 14.68) 2 ஆம் பகுதியாக அற்றிக்பிரசாத் சாமிநாதருக்கு பிரிவிட்டுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு சுண்டிக்குளி கோவிற்பற்று காரையூர் இறை, J/74 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள 'கிழவிதறை' நிலப்பரப்பு 3 குளி 3/8. இது நிலஅளவையாளர் N.கேதீஸ்வரன் 2018.09.18 ஆம் திகதி அளந்து தயாரித்த 4068 ஆம் இலக்கப்படத்தில் துண்டுகள் 1-2 ஆக காட்டப்பட்டவாறு நிலப்பரப்பு 3 குளி 4.76. இதில் ஒரு பக்கமாக துண்டு 2 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 08.08. இந்த நிலப்பரப்பு இரண்டு குளி எட்டு தசம் பூச்சியம் எட்டுக்குரிய எல்லை.

கிழக்கு:- ரோமன் கத்தோலிக்கமிசனுக்குரிய ஆதனம்,

வடக்கு:- மேற்குறித்த 4068 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 (2 ஆம் பகுதியினருக்கு பிரித்துவிடப்படும் ஆதனம்)

மேற்கு:- மாற்றிலீட் யோசப் மற்றும் விக்ரோறியாசைமனின் ஆதனமும், ஒழுங்கையும்.

தெற்கு:- J.B சூசைப்பிள்ளை மற்றும் ஜோலின் மனுவலின் ஆதனம்

இதடங்கலும் வீடு,வடக்கெல்லையில் உள்ள கிணற்றில் அரைவாசியும் செய்பயிர் வான்பயிர் உட்பட இதற்குச்சேர்ந்தவைகளும்.

தற்போது மரியதாஸ் அடைக்கலதாஸ் பெண் கலாஞானி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒருபகுதிக்கு/முழுவதற்கும் உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது மரியதாஸ் அடைக்கலதாஸ் பெண் கலாஞானி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி. அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 199

## கள்ளம் கபடமற்ற சிறுமி

புத்தாண்டுக்கு முன்னைய நாள் இரவு, சம்பளம் வாங்கிய கையோடு வீட்டுக்குள் வந்தார் அப்பா. அவரது அன்பு மகள் ஜெனி தூங்காமல் அவருக்காகக் காத்திருந்தாள். இருவரும் உணவு உண்டபிறகு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்நேரம், அப்பா... அப்பா... இந்தப் புது வருடத்துக்கு எனக்கு ஏதும் பரிசு இல்லையா? என்று கேட்டாள் ஜெனி.

மம்...ம்... கண்டிப்பா உண்டுடா செல்லம், உனக்கு என்ன வேணும் சொல்லு? என்று கேட்டார் அப்பா.

அப்பாவின் கைகளைப் பிடித்தவாறே, எனக்குப் புது சப்பாத்து வாங்கித்தாங்கப்பா, என்றாள் ஜெனி.

நாளைக்கு வாங்கித் தாறேன். இப்ப போய் தூங்கும்மா..என்றார் அப்பா.

ஜெனி கேட்டபடியே, புத்தாண்டு அன்று காலை புதுச் சப்பாத்து வாங்கிக் கொடுத்தார் அப்பா. மிகுந்த மகிழ்ச்சியோடு, புத்தாண்டுப் பரிசைப் பெற்றுக் கொண்டாள் ஜெனி.

சிறிது நேரம் கழித்து, அந்தப் புது சப்பாத்தை பரிசுப் பொருளாக வண்ணத்தாளை வைத்துக் கட்டிக் கொண்டிருந்தாள் ஜெனி. இதைக் கவனித்த அப்பா, யாருக்கு இந்தப்பரிசைக் கொடுக்கப் போற ஜெனி? என்று கேட்டார்.

அது வந்துப்பா.... அடுத்த தெருவுல இருக்கிற ராணிக்குத் கொடுக்கப் போறேன். பாவம் அப்பா அந்தப் பொண்ணு! அவகிட்ட ஒரே ஒரு சப்பாத்து தான் இருக்கு. அதுவும் கிழிஞ்சிருக்குப்பா... தன்னோட கிழிஞ்ச சப்பாத்தை யாராவது பார்த்துவிடுவாங்கன்னு, ராணி மறைச்சு மறைச்சு கஷ்டப்படுறதைப் பல நேரம் கவனிச்சிருக்கேன். அதனாலதான் புத்தாண்டுப் பரிசா புது சப்பாத்து கொடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன் என்று தயக்கத்தோடு சொன்னாள் ஜெனி.

ரொம்ப நல்ல காரியம் ஜெனி. கண்டிப்பாக செய். ஆனா, என்கிட்டே பரிசு உனக்குன்னு ஏன் பொய் சொல்லிக் கேட்டே? என்று அப்பா செல்லக் கோபத்துடன் கேட்டார்.

அப்பா, ஒருவேளை நான் சொல்லியிருந்தா, நீங்க அடுத்த பொண்ணுக்குத்தானே என்று மலிவான விலையில் வாங்கி வரக்கூடும். அதனாலதான் எனக்கு வேணும்னு பொய் சொன்னேன்... என்று தைரியமாகச் சொன்னாள் ஜெனி. என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்துப் போனார் அப்பா!

புத்தாண்டுக்காகத் தயார் செய்திருந்த உணவுப் பண்டாங்களை ஒரு கை பார்த்தபின், தன்னுடைய புத்தாண்டுப் பரிசை ராணியிடம் கொடுப்பதற்காக கிளம்பிச் சென்றாள் ஜெனி. ஆனால் போன சில நிமிடங்களிலேயே திரும்பி வந்தாள்.

இதைக் கவனித்த அப்பா, என்ன ஜெனி, ராணி வீட்டுல இல்லையா? அதுக்குள்ளேயே வந்திட்டியே? என்றார் அப்பா.


நான் ராணிகிட்டே பரிசு கொடுக்கலைப்பா. அவுங்க வீட்டுக் கதவுகிட்ட வெச்சிட்டு ஓடி வந்துட்டேன்... என்றாள் ஜெனி.

ஏன், ராணி கூட சண்டையா? இல்லை கொடுத்தா வாங்க மாட்டாளா? என்று அப்பா கேட்க,

நான் ஒருவேளை அந்தப் பரிசைக் கொடுத்தா ராணி வாங்கிக் கொள்வாள். ஆனால் அதுக்குப் பிறகு என்னைப் பார்க்கும்போதெல்லாம் நன்றியுணர்ச்சியோடு பார்ப்பாள். இயல்பாய் பழகமாட்டாள், ஒரு உதவியாளனாகத்தான் என்னைப் பார்ப்பாள். கடவுள் உண்டியலில் போடும் காசுக்கு விளம்பரம் தேவையா? என்றாள் பிஞ்சுக் குரலில் ஜெனி.

பிறருக்கு உதவ வேண்டுமென்று எண்ணும் தனது பதின்மூன்று வயது மகளைப் பார்த்து நெகிழ்ந்து போனார் அப்பா.

## கேரளாவில்
# ‘நிபா’ வைரஸ் தொற்றால் ஊரடங்கு பிறப்பிக்க பரிசீலிப்பு



(டில்லி)

இந்தியா, கேரளா மாநிலத்தில் நிபா வைரஸ் பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில் குறித்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவது தொடர்பில் கேரளா அரசாங்கம் பரிசீலித்துள்ளது.

குறித்த பகுதியில் மாத்திரம் இதுவரையில் 706 பேரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டவர்களில் 77 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதுடன் 6 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் அதில் 2 பேர் உயிரிழந்துள்ளதாக கேரளா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு குறித்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிவதற்காக 19 மருத்து குழுக்களை கேரள அரசாங்கம் நியமித்துள்ளது.

அத்துடன் ஏழு கிராமங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளதுடன் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிபா வைரஸ் மூளையை பாதிக்கும் வைரஸ் என மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4-5)

# தியாக தீபம் திலீபனுக்கு பிரான்ஸிலும் அஞ்சலி




(பாரிஸ்)

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு பிரான்ஸின் தலைநகர் பாரிஸின் 10ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஈழத் தமிழர்களின் குட்டி யாழ்ப்பாணம் எனப்படும் லாச்சப்பல் பகுதியில் 12 நாட்களுக்கும் தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம் பாரிஸ் 10ஆம் வட்டார பொலிஸார் மற்றும் நகரசபையின் அனுமதியுடன் வணக்கத்திற்காக வைக்கப் பட்டுள்ளது. (நி-5)

# ஈரான் மீது அணு ஆயுத தடைகளை தொடர்ந்து அமுலில் வைத்திருக்க தீர்மானம்

## பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி



(டெஹ்ரான்)

ஈரான் மீது அணு ஆயுத தடைகளை தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்க பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

பிரித்தானிய, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ரஷ்யாவிற்கு ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை விற்பதை தடுக்கும் முயற்சியில் ஈரான் மீதான பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

2015 ஆம் ஆண்டில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்ட நிலையில் அந்த விதிமுறைகளின் கீழ், சில தடைகள் அடுத்த மாதம் நீக்கப்படும்.

ஆனால் யுரேனியத்தை செறிவூட்டி சேமித்து வைத்ததன் மூலம் ஈரான் ஒப்பந்தத்தை மீறியதாக ஐரோப்பிய நாடுகள் குற்றம் சுமத்தி வருகிற நிலையில் இது ஆத்திரமூட்டல் நடவடிக்கை என ஈரான் தெரிவித்துள்ளது.

இருப்பினும் காலாவதியாகும் ஐ.நா.வின் தடைகளை தங்கள் சொந்த சட்டங்களில் இணைத்துக்கொள்வதாக பிரித்தானிய, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

எவ்வாறாயினும் தடைகளுக்கு மத்தியிலும் ஈரானில் தயாரிக்கப்பட்ட பல ட்ரோன்கள் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவால் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரஷ்யா மற்றும் வடகொரியா மீது கூடுதல் பொருளாதார தடைகள்

## அமெரிக்கா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

**ரஷ்யா, வடகொரியா இடையே ஆயுத ஒப்பந்தம் ஏற்பட்டால் இரு நாடுகள் மீதும் கூடுதல் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.**

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், வடகொரியா - ரஷ்யா இடையே வளர்ந்து வரும் உறவு கவலை அளிப்பதாகவும், புடின் மற்றும் கிம்மின் சந்திப்பை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் கருத்துத் தெரிவிக்கையில் உக்ரைன் உடனான போரில், பல்லாயிரக்கணக் கான வீரர்களையும், கோடிக் கணக் கான டொலர் மதிப்பிலான பணத்தையும் ரஷ்யா இழந்துள்ளது. எனவே வடகொரிய ஜனாதிபதியிடம் ரஷ்யா உதவிக் கரம் நீட்டு மாறு கோரிக்கை விடுத்துள்ளது என விமர்சித்துள்ளார். (4-5)

## சீனா சுற்றுலாப் பயணிகள் விசா இன்றிப் பயணிக்கலாம்

### தாய்லாந்துப் பிரதமர் தெரிவிப்பு



(பாங்கொக்)

சுற்றுலாத்துறையை மீட்டெடுக்க தாய்லாந்து அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி வரை சீனாவில் இருந்து சுற்றுலா வருபவர்களுக்கு விசா பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுவதாக தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக அதன் அண்டை நாடான சீனாவில் இருந்து தாய்லாந்துக்கு ஆண்டுதோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நிலவரப்படி சீனாவில் இருந்து மட்டும் 1 கோடிக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து சென்றனர்.

ஆனால் கொரோனா தொற்றுக்கு பின்னர் இந்த எண்ணிக்கை பல மடங்கு குறைந்தது. தற்போது இயல்பு நிலை திரும்பியதால் படிப்படியாக இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனினும் கடுமையான விசா கட்டுப்பாடுகளால் கடந்த 6 மாதங்களில் இது வரை 14 இலட்சம் சுற்றுலா பயணிகள் மட்டுமே சீனாவில் இருந்து வந்துள்ளனர்.

இந்த நிலையிலே சீனாவிலிருந்து சுற்றுலா வருபவர்கள் விசா இன்றிப் பயணத்தை மேற்கொள்ளலாம் எனத் தாய்லாந்துப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும் கஜகஸ்தான் நாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் என தாய்லாந்து சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது. (4-5)

## பங்களாதேஷ் சந்தையில் தீப்பரவல் சுமார் 200 கடைகள் எரிந்து நாசம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலுள்ள சந்தையில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட தீ விபத்தில் 200இற்கும் அதிகமான கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.



எனினும், உயிர்ச்சேதம் எதுவும்இல்லைஎன்று தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கசிவால் தீ மூண்டிருக்கலாம் என்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய சமையல் எண்ணெய், பிளாஸ்டிக் பொருள்கள் சந்தையில் இருந்ததால் தீ மிக வேகமாகப் பரவியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்குமுன்னர், கடந்தஏப்ரல் மாதம் டாக்காவிலுள்ள கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீயில் 5,000 கடைகள் எரிந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5)

## 1.1 மில்லியன் டொலருக்கு ஏலம்போன இளவரசி டயானாவின் கம்பளிச் சட்டை

(லண்டன்)

மறைந்த பிரித்தானிய இளவரசி டயானா அணிந்திருந்த சிவப்புக் கம்பளிச் சட்டை 1.1 மில்லியன் டொலருக்கு மேல் ஏலத்தில் விற்கப்பட்டதாக சோதபிஸ் ஏல நிறுவனம் தெரிவித்தது.



முதல்முறையாக 1981 இல் போலோ விளையாட்டுப் போட்டியின்போது அவர் அதனை அணிந்து சென்றார்.

சிவப்பு நிற ஆடையில் வெள்ளைச் செம்மறியாடுகள் வரிசையாக நிற்பதைக் காணலாம். அதில் ஒரு செம்மறியாடு மட்டும் கறுப்பு நிறத்தில் இருக்கும்.

அந்தச் சட்டை 50,000 முதல் 80,000 டொலர் விலைக்கு விற்கப்படும் என்று நிறுவனம் கணித்திருந்தது. ஆனால் அது 10 மடங்குக்கும் மேல் விலை போயிருக்கிறது.

190,000 டொலர் விலைக்குக் கேட்கப்பட்ட அந்தச் சட்டை ஏலத்தின் கடைசி 15 நிமிடங்களில் 1.1 மில்லியன் டொலரை எட்டியதாக நிறுவனம் தெரிவித்தது.

இதுவரை ஏலம் போன இளவரசி டயானாவின் ஆடைகளில் இதற்குத்தான் அதிக விலை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்குமுன்னர் இந்த ஆண்டு ஜனவரியில் (2023) இளவரசி டயானாவின் ஆடை ஒன்று 604,000 டொலருக்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களைப் பாதுகாக்கும் அரும்படலம் ஓசோன்

இன்று சர்வதேச ஓசோன் தினமாகும். ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி சர்வதேச ஓசோன் தினமானது அனுஸ்டிக்கப்படுகின்றது. அந்தவகையில் ஐக்கிய நாடுகள் சபையினால் அனுஸ்டிக்கப்படுகின்ற முக்கிய தினங்களுக்கு தொனிப்பொருள் குறிப்பிடப்படுகின்றது. அவ்வகையில் இவ்வருடத்திற்கான ஓசோன்தின தொனிப் பொருளாக "ஓசோன் படலத்தை சீர் செய்தலும் காலநிலை மாற்றமடைதலை குறைத்துக் கொள்ளுதலும்" என அமைந்துள்ளது. உயிர்களைப் பாதுகாக்கும் வாயுப்படலமாக நாம் ஓசோனைக் குறிப்பிடுகின்றோம்.

வளிமண்டலமானது எளிய அணுக்களுடன் கூடிய வாயுவகைகள் பலவற்றினது கலவையாகும். இவ்வாயுக்களில் சில உயிர்வாழ்வதற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்வதுடன் வேறு சில வாயுக்கள் உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாவதுடன் சில வாயுவகைகள் உயிரைப் பாதுகாப்பதிலும் பாரிய பங்களிப்பை வழங்குகின்றன. அந்தவகையில் ஓசோனானது காணப்படும் அளவினடிப்படையில் 0.000007 சதவீதமாகக் காணப்படுகின்றது. மிகவும் குறைந்த சதவீதத்தை ஓசோன் வாயுவானது ஒட்சிசன் அணுவினால் உருவாக்கப்பட்டுள்ளது.

மூன்று ஒட்சிசன் அணுக்கள் இணைந்து உருவாக்கப்படும் ஓசோன் வாயுவானது வளி மண்டலத்தில் படை மண்டலப் பகுதியில் காணப்படுகின்றது. இது சூரியனிலிருந்து வருகின்ற தீங்கு விளைவிக்கக்கூடிய கதிர்களை உறிஞ்சி புவியினைப் பாதுகாக்கும் கேடயம் போல் செயற்படுவதுடன் படை மண்டலத்தில் உருவானதால் உலகின் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளிற்கு காரணமாகின்றது. அத்தோடு சூரியனிலிருந்து எமது உலகினை நோக்கி வரும் சக்தி வாய்ந்த எமது உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய கதிர்களிலிருந்து உலகிலுள்ள உயிரினங்களைப் பாதுகாக்கின்றது. ஓசோன் படலம் சிதைவடைதல் அல்லது குறைவடைதல் என்பது எம்மால் உற்பத்தி செய்யப்படுகின்ற சில இரசாயனப் பொருட்களினால் ஓசோன் படலம் சிதைவிற்கு உட்படுகின்றது. இதுவரை




அறியப்பட்ட விஞ்ஞானபூர்வமான தகவல்களின் படி ஓசோன் படலத்தின் சிதைவிற்கு அலசனேற்றப்பட்ட ஹைதரோக்காபன் அதிக தாக்கத்தை செலுத்துகிறது. சிதைவடையச் செய்கின்ற பதார்த்தங்களை நாம் ODS என அழைக்கின்றோம்.

ஓசோன் படைப் பாதிப்பு ஏற்படுவதற்கு குளிர்சாதனப்பெட்டிகள், பல்வேறு குளிரூட்டிகளிலும் உற்பத்தியின் போதும் பழுதுபார்த்தலின் போதும் பாவனையின் போதும் ஏற்படும் கசிவுகளினால் இவை சூழலில் சேருகின்றன. வாசனைத்திரவியங்கள், வர்ணப்பூச்சுக்கள் மற்றும் கிருமிநாசினிகள் விசிறல் பொருளாகப் பயன்படுத்துவதுடன் அப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் குளோரா புளோரா காபன் வாயு வெளிவிடப்படுகின்றது. வைத்திய சேவைகளில் ஆஸ்துமா நோயாளிகள் பயன்படுத்தும் உறிஞ்சி (Inhalers) உற்பத்தி செய்வதில் CFC வெளியேற்றப்படுகின்றது.

ஓசோன்படை பாதிப்படைவதனால் ஏற்படக்கூடிய நோய்களாக தோல் உலர்தல், தோல் சுருங்குதல், தோல் புற்றுநோய் ஏற்படுதல், தோல் சுடுபடுதல், இளவயதில் முதுமைத் தோற்றம் ஏற்படுதல், கண் நோய்கள் ஏற்படுதல், நிறமூர்த்தங்களில் மாற்றங்கள் ஏற்படுதல், சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சூழல் மற்றும் பொதுப்பிரச்சனைகளாக

- அவரைக் குடும்பத் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு உற்பத்தி திறன் குறையும். இதனால் மக்களில் புரதக் குறைபாடு ஏற்படும்.
- புற ஊதாக்கதிர்களின் சக்தி அதிகமாகையால் அவற்றிற்கு நீரினுள் நீண்ட தூரம் பயணிக்க முடிவதால் ஈருடக வாழிகளின் முட்டைகள் அழிந்துவிடுவதால் உயிர்ப்பல்வகைமை குறைவடைந்து மீனின் சனத்தொகை குறைவடையும்.
- கடல் தாவர நுண்ணுயிர்களுக்கும் கடல் தாவரங்களில் தங்கியிருக்கும் மீன்களுக்கு உணவுத் தட்டுப்பாடும் ஏற்படும். இது கடல்களில் மீன் உற்பத்தி குறைந்து மக்களின் புரதத் தேவைகளை சிக்கலை ஏற்படுத்தி மந்த போசணையை ஏற்படுத்தும்.

இவ்வாறான பல்வேறு பாதிப்புக்களை நாளாந்தம் நாம் எதிர்கொள்ள வேண்டிய தேவை உருவாகிறது. எனவே நாம் ஓசோன் படலத்தை பாதுகாத்து நாம் மாத்திரமின்றி எதிர்கால சந்ததியினரும் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்பதற்காக உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. அவ் வகையில் இலங்கையும் மொன்றியல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன் தேசிய ஓசோன் அலகினை தாபித்து அதன் மூலமாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

எனவே எதிர்காலத்தில் மக்களிடையே சூழல் தொடர்பான கல்வியினை உரியவாறு போதித்தல், மக்களிடையே விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்தல், ஓசோன் படலத்தை பாதிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தலும் உரிய தண்டனையினை பெற்றுக்கொடுத்தலும், ஓசோன் படலத்தை பாதிக்கும் உற்பத்திப் பொருட்களின் செயற்பாட்டிற்கு தடை விதித்தல், பயன்பாட்டினையும் தடுத்தல், ஓசோன் படைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத சூழல் நேயமுடைய உற்பத்திக்கு ஊக்கமளித்தல், பொலித்தீன், பிளாத்திக்கு பாவனைகளை குறைத்துக்கொள்ளல் அல்லது தவிர்த்துக்கொள்ளல், மரநடுகை செயற்பாடுகளை பெருக்குதலும் அதனை ஊக்கப்படுத்துதலும் போன்றவற்றின் மூலம் ஓசோன் படை பாதிப்படைவதனை தவிர்த்து இவ் அழகிய பூமியில் அனைத்து உயிர்களும் ஆரோக்கியமாக வாழ்ந்திட முடியும்.


க.சுவாமிநாதன், ஆசிரியர்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2914

வதனி




திமுத்




நிகர்




வத்சலா




காருணி




துரைராசா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விவசாய நிலத்தில் மயானம் அமைக்க முயற்சி

## ❖ பிக்குகள் அடாவடி
## ❖ எதிர்ப்பால் அளவீட்டுப்பணிகள் நிறுத்தம்

(குருமன்காடு)

**வவுனியா கருப்பனிச்சாங்குளம் கிராமத்தில் உள்ள தமிழர்களின் விவசாய நிலத்தை அருகில் உள்ள கொக்கு வெளி பகுதி சிங்கள மக்களுக்கு மயானம் அமைக்க வழங்குவதற்கு நேற்று பிக்கு தலைமையில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில் மக்களது எதிர்ப்பையடுத்து அளவீட்டுப்பணிகள் நிறுத்தப்பட்டன.**





இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கருப்பனிச்சான்குளம் கிராமம் தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் கிராமம் ஆகும். இங்கு வசித்து வந்த தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்றதுடன், யுத்தம் முடிவடைந்த பின் மீண்டும் வருகை தந்து தமது காணிகளில் குடியேறி, விவசாய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமத்தில் தமது மயானம் இருந்ததாக தெரிவித்து அருகில் உள்ள கொக்குவெளி சிங்கள கிராம மக்கள் இரு பிக்குகளின் தலைமையில் குறித்த பகுதியில் அமைந்துள்ள விவசாய காணி ஒன்றினை உரிமை கோரி வந்ததுடன், தற்போது அதனை தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளதாகவும் தெரிவித்து குழப்பம் விளைவித்து வந்தனர்.

அத்துடன் குறித்த காணியில் சிங்கள மக்களுக்கான மயானம் இருந்ததாக கூறி, அதனை மீள அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு காணிக்கான அனுமதிப் பத்திரத்தைக் கூட பிரதேச செயலகத்தால் வழங்காமல் முடக்கி வைத்துள்ளனர்.

ஆனால் காணியில் முன்பு மயானம் இருந்தமைக்கான எந்த சான்றுகளும் இல்லை என குறித்த காணியில் விவசாயம் செய்யும் நபர் தெரிவித்துள்ளார்.


இருப்பினும் குறித்த பகுதிக்கு பிக்கு இருவரின் தலைமையில் வருகை தந்த சிங்கள மக்கள் குறித்த காணியில் தங்களது மூதாதையர்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த காணியில் மயானம் அமைப்பதற்காக அதனை மீட்டுத்தருமாறும் பிரதேச செயலாளரிடம் தெரிவித்திருந்தனர்.


அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் பொலிஸார் இரு தரப்புடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் குறித்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் சென்று அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்குமாறு பிரதேச செயலாளர் இரு தரப்புக்கும் தெரிவித்ததுடன், அதுவரை தற்காலிகமாக அயலில் உள்ள மயானத்தில் இறந்தவர்களின் சடலங்களை புதைக்குமாறும் சிங்கள மக்களுக்கு தெரிவித்திருந்தார்.

மேலும் அளவீட்டுப் பணிகளுக்காகச் சென்ற நிலஅளவைத் திணைக்களத்தின் அலுவலர்கள் அளவீட்டுப் பணிகளை நிறுத்திச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4-5-250)

# மந்துவில் படுகொலையின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல்





(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் சந்திக்கு அருகாமையில் 1999 ஆம் ஆண்டு விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களுடைய 24 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தாய்த்தமிழ் பேரவையின் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தாக்குதலில் 24 அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களை நினைவு கூரும் வகையில் இறந்தவர்களின் உறவுகளாலும் மக்களாலும் சுடரேற்றி மலர் தூவி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

தாய்த்தமிழ் பேரவையின் நினைவேந்தல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நவநீதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.சத்தியரூபன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சி.குகனேசன், சமூக செயற்பாட்டாளர் த.லோகேஸ்வரன் மற்றும் பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-5-289)

# அக்கராயன் பாடசாலையில் கல்விசார் வழிகாட்டல் செயலமர்வு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டச் செயலக மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்களிற்கான கல்விசார் தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது க.பொ.த சாதாரண தர மாணவர்கள், க.பொ.த உயர்தர மாணவர்கள், தரம் 9 மாணவர்கள் ஆகியோருக்கு கல்வியில் அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், மாணவர்கள் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கான திறன்கள் மற்றும் தொழில் தகைமைகள், மாணவர்களின் எதிர்காலம் நோக்கிய வளமான வாழ்க்கை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதனைவிட மாணவர்கள் தமக்கான தொழில் வாய்ப்புக்களை பெற முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பாடசாலை கல்வியின் பின் முன்னெடுக்கக் கூடிய கற்கைகள், வருமானம் ஈட்டும் தொழில்நுட்ப கற்கைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

மேலும் உயர் கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளத் தேவையான கல்வி சார்ந்த தொழில் வழிகாட்டல்கள், பல்கலைக்கழக வாய்ப்புக்கள், பரீட்சைக்கு பின்னரான கல்வியல் கல்லூரிக்கான வாய்ப்புக்கள், போட்டிப் பரீட்சைகளுக்கு முகம் கொடுத்து தொழிலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் தொடர்பாக மாணவர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்.

செயலமர்வின் வளவாளர்களாக மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் கரைச்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (4-5-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 284





"பயம் ஒன்றுமில்லை. இருட்டில் வந்து மேலே விழுந்தால் என்ன செய்வது? கையில் வேல்கூட இல்லை. வீட்டில் வைத்து விட்டேன்."

"இந்தா! இந்த ஆயுதத்தை வைத்துக்கொள்!" என்று பூங்குழலி மண்டபத்தில் கிடந்த ஓர் ஆயுதத்தை எடுத்துக் கொடுத்தாள். அது ஒரு விசித்திரமான ஆயுதம். இரு புறமும் வாள் போல் கூர் கூரான முட்கள் இருந்தன. முட்கள் இரும்பைவிடக் கெட்டியாயிருந்தன. இந்திரனுடைய வஜ்ராயுதம் இப்படித்தான் இருக்கும் போலும்!

"இது என்ன ஆயுதம்? எதனால் செய்தது?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இது ஒரு மீனின் வால்! இந்த மண்டபத்தில் குடியிருந்த சிறுத்தை என் மீது பாய வந்தபோது இதனால் அடித்துத்தான் அதைக் கொன்றேன்!" என்றாள் பூங்குழலி.

**ஏழாம் அத்தியாயம்**

**"சமுத்திர குமாரி"**

அன்று பகற்பொழுது வந்தியத்தேவனுக்கு எளிதில் போய்விட்டது. பாதி நேரத்துக்கு மேல் தூங்கிக் கழித்தான். விழித்திருந்த நேரமெல்லாம் பூங்குழலியின் விசித்திர சுபாவத்தைப் பற்றி எண்ணுவதில் சென்றது.

என்ன அதிசயமான பெண்? எவ்வளவு இனிய சரளமான பெயர்? ஆனால் சுபாவம் எவ்வளவு கடுமையானது? 'கடுமை' மட்டுந்தானா? அதில் இனிமையும் கலந்து தானிருந்தது! சிறுத்தையை அடித்துக் கொன்ற காரியத்தைப் பற்றி எவ்வளவு சர்வசாதாரணமாகக் கூறினாள்? இவ்வளவுடன் சில சமயம் உன்மத்தம் பிடித்தவள் மாதிரி நடந்து கொள்கிறாளே, அது ஏன்? இந்தப் பெண்ணின் வாழ்க்கையில் ஏதோ ஒரு கசப்பான சம்பவம் நடந்திருக்க வேண்டுமே! கசப்பான சம்பவமோ, அல்லது இனிப்பான சம்பவந்தானோ! இரண்டினாலும் இப்படி ஒரு பெண் உன்மத்தம் பிடித்தவள் ஆகியிருக்கக் கூடும்! அல்லது ஒன்றுமே காரணமில்லாமல், பிறவியிலேயே இத்தகைய இயற்கையுடன் பிறந்தவளோ? இவளுடைய பெற்றோர்களின் இயற்கையில் விசேஷம் ஒன்றையும் காணவில்லையே? இனிய, சாந்த சுபாவம் படைத்தவர்களாயிருக்கிறார்களே! குணம் எப்படியாவது இருக்கட்டும். நம்மிடம் இவளுக்கு இவ்வளவு சிரத்தை ஏற்பட்டதன் காரணம் என்ன? பழுவூர் ஆட்களிடம் நாம் பிடிபடாமல் தப்புவிப்பதற்கு இவ்வளவு பிரயத்தனம் செய்திருக்கிறாளே? இலங்கைக்குப் படகு வலித்துக் கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறாளே? இதிலெல்லாம் ஏதாவது ஏமாற்றம் இருக்குமோ? ஒருநாளும் இல்லை. ஆனாலும் இவள் மனம் மாறியதன் காரணம் என்ன? நம்மிடம் இவள் எந்தவித பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கிறாள்? பின்னால் கூறுவதாகக் கூறியிருக்கிறாளே? அது என்னவாயிருக்கும்?'

இவ்வாறு வந்தியத்தேவன் சிந்தனை செய்து கொண்டிருந்த சமயங்களில், பூங்குழலி கூறியிருந்தது போலவே, அவனைச் சுற்றி நாலாபுறங்களிலும் அடிக்கடி அமளிதுமளிப்பட்டது. குதிரைகளின் ஓட்டம், மனிதர்களின் அட்டகாசம், சிறிய வன ஜந்துக்களின் பயம் நிறைந்த கூச்சல், பறவைகள் கிறீச்சிடுதல் இவ்வளவும் சேர்ந்து சில சமயம் ஒரே அமர்க்களமாயிருந்தது. அடுத்தாற்போல் அமைதி குடிகொண்டு நிசப்தமாயுமிருந்தது. அமர்க்களப்பட்டதெல்லாம் தன்னைச் தேடிப் பிடிப்பதற்காகத்தான் என்று வந்தியத்தேவன் உணர்ந்தான். வைத்தியரின் மகன் செய்த துரோகமும் அவனுடைய மனத்தில் அடிக்கடி வந்து கொண்டிருந்தது!

'நிர்மூடன்! பூங்குழலியிடம் அதற்குள் மையல் கொண்டு விட்டதாக அவனுக்கு எண்ணம் போலும்! சிறிய குட்டையில் உள்ள தண்ணீர் வடவா முகாக்கினியின் மீது காதல் கொண்டது போலத் தான்! பெண் சிங்கத்தை ஒரு சுண்டெலி கல்யாணம் செய்து கொள்ள எண்ணிய கதைதான்!

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வாயினால் நொந்த குருவி

ஒருவழியா கோடை காலத்தின் இறுதிக் கட்டம் அது. பெரிய ஆல மரத்துல ஒரு ஜோடி சிட்டுகுருவிகள் வசித்து வந்தன. இரண்டும் மழைக்காலம் வாறதுக்குக்கு முன்னாடி உறுதியான கூட் டைக்கட்ட எண் ணின.



நன்கு வேலை செய்யும் குணமுடைய இரண்டும் சீக்கிரம் தாங்கள் நினைத்த படி அழகிய வீடு கட்டி மகிழ்ச்சியாக இருந்தன. ஒரு நாள் மிகவும் மழை பெய்து கொண்டிருந்தது. அப்போ இவங்க கூடு இருக்கிற மரத்துக்கு கீழ ஒரு குரங்கு வந்து ஒதுங்கியது. மழைல ரொம்ப நனஞ்சுருச்சு, மேலும் அந்த குரங்கு குளிர்ல நடுங்கி கொண்டிருந்தது.

அந்த குரங்கை பார்த்து பெண் குருவி "ஐயா ஏன் இப்படி மழையில் நனையறீங்க. உங்க வீட்டுக்கு போகலையா?னு கேட்டுச்சு. அதற்கு அந்த குரங்கு சொல்லுச்சு," எனக்கு தனியா வீடு எல்லாம் இல்லம்மா. நான் மரத்துக்கு மரம் மாறி மாறி தங்குவேன்.

இதை கேட்ட அந்த பெண் குருவி, "இந்த குரங்குக்கு மூளை இல்லையா? எதிர் காலத்திற்கு சேகரிக்காத சோம்பேறி குரங்கு போலனு. விமர்ச்சித்தது. கோபப்பட்ட அந்த குரங்கு," குருவியம்மா கொஞ்சம் அமைதியா இரு. குரங்குகள் எதுவும் வீடு கட்டுவதில்லை. நாங்க மரத்'தில்தான் தங்குவோம்னு" சொல்லுச்சு.

அமைதியாகாத குருவி மேலும், நாங்க பாருங்க. எங்களோட சிறு அலகை வெச்சு, இந்த மாறி அழகிய கூடு கட்டிருக்கிறோம். ஆனால் உன்னிடம் இரண்டு கைகள் இருந்தும் உங்களால ஒரு சின்ன வீடு கூட கட்ட முடியாதா? என்று கூறி சிரித்தது. குரங்குக்கு கோபம் அதிகமானது.

குரங்கு கோபமாவதை பார்த்த ஆண் குருவி பெண் குருவியிடம்," அமைதியாக இரு அவரை ஏளனம் செய்வதால் நமக்கு எந்த நல்லதும் நடக்காது, அவரவர்களுக்கு இருக்கும் வாழ்க்கையை வாழ விடுவதே சிறந்தது" என்றது. இதை காதிலே போட்டுக் கொள்ளாத அந்த பெண் குருவி சிரிப்பதை நிறுத்தவில்லை "ஏய் குருவி ஒரு வாட்டி சொன்னா புரியாதா? சிரிக்கிறதை நிறுத்துனு கத்தியது. குரங்கு கத்திய பிறகும், பெண் குருவியோ விட்ட பாடில்லை. சிரித்து கொண்டே இருந்தது.

கோபம் தலைக் கேறிய குரங்கு தன்னோட இரண்டு கைகளை கொண்டு அந்த குருவின் கூட்டை கிழித்து எறிந்தது. அந்த குருவிக்கு இப்பொது கோபம் வந்தது. ஆனால் என்ன செய்ய முடியும். சிரிச்ச அளவுக்கு அழுதுட்டு மழையில் நனைந்த படி இருந்தது. தேவையில்லாத பேச்சினால் தனக்கு தான் நஷ்டம்னு மனசுல நெனச்சு வருந்தியது.

குட்டி கதை எப்படி இருந்தது குட்டிஸ். நம்மளோட வாயை அளவாக பயன்படுத்தினால் நம்ம வாழ்க்கையும் வளமாக இருக்கும். இல்லன்னா வாயே நமக்கு வினையாகும். சில நேரங்களில் நாம் அடுத்தவர் வாழ்க்கை யில் தலையிடாமல், நமக்கு கிடைத்த வாழ்க்கையை அழகாக செதுக்கி விடலாம். ஆகு குழந்தைகளே சிந்தித்து சிறப்பாக உங்கள் வாழ்க்கையை வாழுங்கள் எவ்விடத்தும் நாவடக்கம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்

~ தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீதியரசர் விக்னேஸ்வரனின் அழைப்பு தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சந்திக்க வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாகச் சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் ஆராய்வோமாயின் அது காலத்தின் தேவையானது என்பதை மட்டும் அறுதியிட்டுக் கூறமுடியும்.**

**ஏனெனில் எங்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் யார் என்ன கதைத்தாலும் அதனைத் தீர்த்து வைக்கின்ற வல்லமை இந்தியாவிடம் மட்டுமே உண்டு.**

**இந்த உண்மையை யார் நிராகரித்தாலும் அவர்கள் தமிழர்களின் நலன்சார்ந்து சிந்திப்பவர்கள் அல்ல என்பதை அறுதியிட்டுக்கூற முடியும்.**

**தவிர, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தலைசிறந்த தலைவராக உலகம் அங்கீகரித்துள்ளது.**

**அதேநேரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் அவர் என்பதும் அவரின் வருகை அண்மைக் காலத்தில் நடந்ததென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.**

**இதற்கும் மேலாக, தமிழகத்தில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் மோடி; யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஒரேயொரு இந்தியப் பிரதமர் நான்தான் எனப் பெருமையாகக் கூறியிருந்தார்.**

**இதற்கும் மேலாக, இலங்கைக்கு வருகை தந்த பிரதமர் மோடி, தமிழ்த் தலைவர்களைச் சந்தித்தபோது; இந்தியாவை நம்புங்கள். இந்தியா உங்களைக் கைவிடாது என்க்கூறியதுடன் இந்தியாவுக்கு வாருங்கள் சந்திப்போம். கதைப்போம் என தமிழ் அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.**

**பொதுவில் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதென்பது சாதாரணமான விடயமல்ல.**

**அவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெற வேண்டுமாயின், அதற்கு இந்திய அரசியல் செல்வாக்குத் தேவைப்பட்டது. ஆனால் பிரதமர் மோடியைப் பொறுத்த வரை நிலைமை அவ்வாறன்று.**

**மாறாக ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களை இந்தியாவுக்கு வாருங்கள். சந்திப்போம் என அவர் அழைத்துள்ளார்.**

**எனவே அவர் அழைப்பு விடுத்த சந்தர்ப்பத்தை தமிழ் அரசியல் தலைவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும்.**

**என்ன செய்வது? கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைத் தவறவிடுவதுதானே ஈழத் தமிழரின் தலைவிதி என்றாயிற்றே.**

**பரவாயில்லை. அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்ளுதல் என்பது மிகவும் அவசியமானது.**

**ஆகையால் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்த கருத்தை தமிழ்த் தலைவர்கள் கவனத்திலெடுக்க வேண்டும்.**

**அதுபற்றிக் கூடிக் கதைத்து பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.**

**2024ஆம் ஆண்டு இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கியிருப்பதால், நம் தமிழ்த் தலைவர்கள் பிரதமர் மோடியை மிக விரைவில் சந்தித்து இனப் பிரச்சினைக்கான தீர்வை விரைந்து பெற்றுத் தருமாறு கேட்க வேண்டும்.**

**இதனை நம் தமிழ் அரசியல் தலைவர்கள் செய்யத் தவறுவார்களாயின், இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது கானல் நீராகி விடும். கவனம்.**

# போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குக

## பொதுமக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப் பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து முன்மொழிவுகளையும் கருத்துக்களையும் அனுப்பிவைப்பதற்கான வாய்ப்பு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக கடந்த ஜீன் 8 ஆம் திகதி விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது.

குறித்த குழு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு செயற்படுகின்றது.

இந்த குழுவின்மூலமே பொதுமக்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள்தமது முன்மொழிவுகள்ளயும்,கருத்துக்களையும் எழுத்து மூலம் legis_com @parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், பாராளுமன்ற விசேட குழு, இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை என்ற முகவரிக்கோ தபால் மூலம் அனுப்பிவைக்க முடியும்.

இதற்கமைய ஆர்வமுள்ள தரப்பினர் 2023 ஒக்டோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது முன்மொழிவுகளையும், கருத்துக்களையும் அனுப்பி வைக்க முடியும்.

தமது கருத்துக்களை எழுத்துமூலம் சமர்ப்பிக்கும் நபர்களிடமிருந்து அவ்விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு குழு அவசியம் என தீர்மானிக்கும் பட்சத்தில் ஆவணங்களுடன் அதன் முன் தோன்றுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர் அழைக்கப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நல்லூரில் யாசகரின் குழந்தை மாயம்

(நல்லூர்)

யாழ்.நல்லூரில் யாசகம் பெற பெற்றோர்களுடன் வந்த பெண் குழந்தையை காணவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் இருந்து , நல்லூர் ஆலய தேர் திருவிழாவில் யாசகம் பெறுவதற்காக இரண்டு பிள்ளைகளுடன் பெற்றோர் வந்துள்ளனர். அவர்கள் தேர் மற்றும் தீர்த்த திருவிழாவின்போது நல்லூரில் யாசகம் பெற்றுள்ளனர்.

இதன்போது , அவர்களின் இரண்டரை வயது பெண் பிள்ளை நல்லூர் வளாகத்தில் நேற்று முன்தினம் தீர்த்த திருவிழாவின்போது காணாமல் போயுள்ளது.

தமது குழந்தை காணாமல் போனது குறித்து , பெற்றோரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# அனுரகுமார திஸாநாயக்க அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க அமெரிக்காவுக்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் 28 ஆம் திகதி முதல் நவம்பர் 5 ஆம் திகதி வரை அவர் அமெரிக்காவில் உள்ள சில பிரதான நகரங்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

லொஸ்ஏஞ்சல்ஸ், பொஸ்டன், ஹூஸ்டன், நியூயோர்க், வொஷிங்டன், வேர்ஜினியா ஆகிய நகரங்களில் தேசிய மக்கள் சக்தியின் கிளை அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ள கூட்டங்களில் அவர் உரை நிகழ்த்த உள்ளார்.

அனுரகுமார திஸாநாயக்க இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்து, அங்கு சில நகரங்களில் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பேரம்பலம் வீதி, கண்டிவீதி, புங்கங்குளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மடுகந்த டெலிகாம், மலையாபருத்திக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

சனல் 4 குற்றச்சாட்டு

# ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் குழு நியமனம்

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4 தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவை நியமித்துள்ளார்.

விசாரணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஓய்வு பெற்ற விமானப்படை தளபதி ஏ.சீ. எம்.ஜயலத் வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச ஏ.ஜே.சோசா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சனல் 4 வெளியிட்டுள்ள தகவல் தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துவதற்காக ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரச அதிகாரிகளைக் கொண்ட குழுவை நியமிக்க ஜனாதிபதி அண்மையில் தீர்மானித்திருந்தார். (ம-7)

# கஞ்சா பயிரிட்ட ரஷ்ய பிரஜை கைது

(கொழும்பு)

இலங்கையில் ரஷ்ய பிரஜை ஒருவர் கஞ்சா பயிரிட்டிருந்த இடம் ஒன்றை ஹபராதுவ பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

ரஷ்ய பிரஜை ஒருவரை தாக்கி பலவந்தமாக பணம் பறித்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மற்றுமொரு ரஷ்ய பிரஜை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் போது இந்த கஞ்சா பயிர் செய்கை தொடர்பான விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ரஷ்ய பிரஜை தங்கியிருந்த வஞ்சாவல கந்துருதுவ பிரதேசத்தில் இரகசியமாக கஞ்சாவை பயிரிட்டுள்ளார்.

அங்கிருந்து 591 கஞ்சா செடிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றிய கஞ்சா செடிகளுடன் ரஷ்ய பிரஜை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார். (ம-7)

# யானை தாக்கியதில் மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

காவந்திஸ்ஸ ரஜமஹா விகாரைக்கு வருடாந்த ஊர்வலத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டு விகாரையில் கட்டி வைக்கப்பட்டிருந்த யானை தாக்கியதில் 12 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

குறித்த விகாரையில் யானை கட்டி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு நேற்று யாரிடமும் கூறாமல் மாணவன் சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

யானை தாக்கியதில் பலத்த காயங்களுக்குள்ளான மாணவன் ஆலய உத்தியோகத்தர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவம்தொடர்பில்பனாமுற பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



33

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆனால் IMF பொருளாதார வல்லுநர்கள் தமது பொருளாதார உதவியின் விளைவாக கடன் பெற்ற நாடு தன்னுடைய கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள விகிதத்தை 60 வீதமாக குறைத்துக் கொள்ளும் என்ற யோசனையுடனேயே பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள்.

இந்த நிலைமையில் கடன் பெற்ற நாட்டின் நிதி அமைச்சருக்கு வேறு வழி கிடையாது. அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு வணக்கம் செலுத்தி விட்டு வர வேண்டியது தான்.

பாரம்பரியமாக IMF ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் கடனின் பங்கைப் பார்த்து, அது சமாளிக்கப்படக் கூடியதா இல்லையா என்று முடிவெடுத்து வந்தது. அதாவது, IMF உதவித்திட்டத்திற்குப் பிறகு நாட்டின் கடன் பங்கு சமாளிக்கப்படக் கூடியதாக இருக்கும் என்று IMF ஊழியர்கள் நம்புகிறார்களா என்று அதன் ஆளுநர் குழுவிடம் சொல்ல வேண்டும்.

பாரம்பரியமாக இது ஒரு வெட்டு ஒன்று துண்டு இரண்டு முடிவாகும். ஆம் அல்லது இல்லை என்ற பதில் மட்டுமே இருக்க முடியும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பிரேசில் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு கடன் வழங்கப்பட்ட போது இதுதான் நடந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கொள்கையை மாற்ற IMF முடிவு செய்தது.

அவர்கள் இப்போது ஒரு இரண்டும் கெட்டான் பகுதி என்று ஒன்றை அனுமதிக்கிறார்கள். இங்கு IMF உதவியின் பின்னர் ஒரு நாட்டின் கடன் சமாளிக்கப் படக்கூடியதா இல்லையா என்றுIMF ஊழியர்களால் உறுதியாக சொல்ல முடியாது.

எந்தவொரு கடனாளி நாடும் எந்தவிதமான கலந்துரையாடலும் இன்றி அதன் கடனை மறுசீரமைக்க முடியாது. கடன் கொடுத்தவர்களுடன் கலந்தாலோசிக்காமல் இருப்பது தற்கொலை செய்வதற்கு ஒப்பானது.

இதன் மூலம் ஒவ்வொரு கடன் வழங்குநரும் மறுசீரமைத்தல் விதிமுறைகளை தமக்கு ஏற்றவாறு அமைக்க முடியும் என்று அர்த்தமில்லை. அதேவேளை, எந்த ஒரு கடனாளி நாடும் தனது கடன் மறுசீரமைத்தல் முன் மொழிவு எடுத்த எடுப்பிலேயே குப்புற விழுவதை விரும்பமாட்டாது. கடனளித்தவர்களை புறக்கணித்தால் இருக்கும் ஆபத்து இதுவாகும்.

இந்த கலந்துரையாடல் இரண்டு வழிகளில் செய்யப்படுகிறது. முதலாவது வழி 'கடனளித்தவர்களுடன் கலந்தாலோசனை (creditor consultation)' என்பதாகும். இங்கு கடனாளி நாடு ஒரு நிதி ஆலோசகரை நியமிக்கும்.

நிதி ஆலோசகர் கடனளித்தவர்களிடம் தனித்தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ பேசி அவர்களின் மனக்கிடக்கையை அறிந்து கொள்கிறார். கடனாளி நாடு என்ன செய்யப் போகிறது என்பதை அவரால் சட்ட ரீதியாக வெளியிட முடியாது. ஆனால் சில அனுமானங்களை வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியும்.

உதாரணமாக, "கடனாளி நாடு 30% கடன் தள்ளுபடியுடன் உங்களை அணுகினால் அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று அவர் கேள்வி கேட்கலாம். அதற்கு பதிலாக நாங்கள் அதை விரும்ப மாட்டோம். என்பதுதான் கடனளித்தவர்களின் முதல் வாக்கியமாக இருக்கும்.

ஆனால், இரண்டாவது வாக்கியமாக, "வேறு வழியில்லாவிட்டால் நாங்கள் அதை ஏற்றுக் கொள்வோம். அதனையிட்டு கோபப்படுவோம்." என்று அவர்கள் சொல்லக் கூடும். நிதி ஆலோசகர் இந்த கலந்துரையாடலின் பலனை கடனாளி நாட்டுக்கும்IMF இற்கும் எடுத்துச் செல்வார்.

கடனளித்தவர்களின் ஒப்புதல் கிடைக்கக் கூடிய கடன் மறுசீரமைத்தல் தொடர்பான எல்லைகள் என்ன என்பதை அவர் தெரிவிப்பார். IMF ஐப் பொறுத்தவரை இந்த கடன் மறுசீரமைத்தல் முன்மொழிவுக்கு கடனளித்தவர்களின் பெரும்பான்மையினர், பொதுவாக 85 அல்லது 90 வீதமானவர்கள், உடன்பட வேண்டும் என்று சொல்லும். அந்த வகையில் கடனளித்தவர்களுடன் கலந்தாலோசனை, கடனளித்தவர்களின் அதி உச்ச விகிதாசாரத்தினர் ஏற்றுக் கொள்ளக்கூடிய கடன் மறுசீரமைத்தலுக்கான முன்மொழிவுகள் என்பவை இந்த முதலாவது வழியில் முக்கியமானவை.

இரண்டாவது வழி சர்ச்சைக்குரியது. இந்த வழியில் கடனாளி நாடு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடன் வழங்குநர் குழுக்களை (creditor committee) அங்கீகரித்து அவற்றினூடாக கடனளித்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

கலந்தாலோசனை, பேச்சுவார்த்தை ஆகிய இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் முக்கியமானது. முதலாவது வழி கடனளிப்பவர்களுடன் கலந்தாலோசிப்பது பற்றி கதைக்கிறது. இரண்டாவது வழி கடனளித்தவர்களுடன் பேரம் பேசுவதைப் பற்றிக் கதைக்கிறது.

கடன் வழங்குநர் குழுக்களை அங்கீகரிப்பதனால் கடனாளி நாட்டுக்கு சில நன்மைகள் இருக்கின்றன. முதலாவது, இவ்வாறான ஒரு குழு இருந்தால் கடனாளி நாட்டின் கணக்கு வழக்குகளை அவர்களே சரிபார்ப்பார்கள். கடனாளி நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி பற்றிய கூற்றுக்களை சரி பார்ப்பார்கள், IMF உடன் கலந்தாலோசிப்பார்கள், தேவையான அனைத்து வேலைகளையும் செய்வார்கள். இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

இரண்டாவது ஒவ்வொரு கடனளித்தவரும் கடன் மறுசீரமைப்பின் விதிமுறைகள் தம்மைப் போன்ற ஒரு கடனளித்தவர் குழுவால் பேச்சுவார்த்தை மூலம் எய்தப்பட்டது என்பதை அறிந்து நிம்மதி அடைவார். அதாவது தாங்கள் பேச்சுவார்த்தை மூலம் அடையக் கூடிய சிறந்த தீர்வு இதுதான் என்ற செய்தி அவர்களுக்கு மறைமுகமாக தெரிவிக்கப்படும்.

இவ்வாறான ஒரு கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் ஏற்பட்டால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட கடன் வழங்குநர் குழு அதற்கு ஒரு நல்ல தர முத்திரையை அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும்.

ஆகவே, பரந்த கடனளிப்பாளர் சமூகத்திற்கு இந்த ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்படும் போது, பொதுவாக அது ஒரு கடன் வழங்குநர் குழுக்களினது கூட்டுச் செய்திக்குறிப்பாக வெளியிடப்படும். அதில் கடனாளி நாட்டின் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களிற்கான கடன் வழங்குனர் குழுவும் அதன் அங்கத்தவர்களும் அந்த கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ஏனைய கடனளித்தவர்களும் அதனை ஏற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படும். இது மிகவும் பயனுள்ளது.

ஸ்ரீலங்காவின் கடன் மறுசீரமைப்பில் அதற்கு கடனளித்தோருடன் கலந்தாலோசனை (creditor consultation) செய்வதற்கு லசார்ட் அன் கிளிபர்ட் சான்ஸ் (Lazard and Clifford Chance, LLP) எனும் இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனத்தை ஸ்ரீலங்கா அமர்த்தியுள்ளது.

அதற்கென அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் 5.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் கடன் மறுசீரமைப்புக்கு இணங்கப் போவதில்லை என்று சொல்லிக் கொண்டு ஸ்ரீலங்காவுக்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பிணைமுறிக் கடன் கொடுத்த ஹமில்டன் வங்கி (Hamilton Bank) தனக்கு சேர வேண்டிய அசலையும் வட்டியையும் பெற்றுத் தருமாறு அமெரிக்காவின் நியூயோர்க் நகர நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது.

இவ்வாறாக லீ புக்ஹைட் சொன்ன பல செயற்பாடுகள் ஸ்ரீலங்காவின் கடன் மறுசீரமைப்பில் நடந்து கொண்டிருக்கின்றன.

இலங்கை பெற்ற வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்க, கடன் வழங்கிய நாடுகள் இணக்கம் தெரிவித்தால் மட்டுமே இது சாத்தியம் ஆகும்.

சீனாவைத் தவிர இலங்கைக்கு கடன் வழங்கிய சகல நாடுகளும், அக் கடன்களை மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. சீனாவும் இறுதியில் வளைந்து கொடுக்கும் போல் தென்படுகிறது. இவை எல்லாவற்றையும் நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடியில்...

கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கடமைக்குச் சென்ற ஊழியரே உயிரிழந்துள்ளார். (ம-7,30,33,104)

## கிளிநொச்சியில்...

மீட்கப்பட்டுள்ளார்.

மலையாளபுரம் புதுஐயன்கன்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நபர்களை கைது செய்வதற்காக மூன்று பொலிஸார் கடந்த வியாழக்கிழமை காலை 6 மணியளவில் சென்றுள்ளனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரை கண்டு குளத்திற்குள் குதித்து தப்பியோடிய போது அவர்களை பொலிஸார் தனித் தனியாக துரத்திச் சென்றுள்ளனர்.

இறுதியில் இரு பொலிஸார் திரும்பிய நிலையில் ஒருவர் காணாமல் போயிருந்தார். அவரை இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து தேடிய போதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் குளத்திற்குள் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தேடுதலை மேற்கொண்டதில் காணாமல்போன பொலிஸ் உத்தியோகத்தர் குளத்திற்குள் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பன்சலகொட வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த லியனகே சத்துரங்க என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## கொக்குத்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் நேற்று 9ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் 9 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியின்போது முழுமையான 17 உடற்பாகங்கள் இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், குறித்த அகழ்வுப் பணி நேற்றைய தினமும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நிலையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (ம-7,299)

## தமிழர் விடயத்...

மலேயே இருக்கிறது.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக முன்வைக்கப்பட்ட சாதாரண கோரிக்கைகள்கூட 36 ஆண்டுகளைக் கடந்தும் நிறைவேற்றப்படாத நிலையே இந்தநாட்டில் இன்னமும் தொடர்கிறது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால இனப்பிரச்சினை தொடர்பில் அன்னை இந்திராகாந்தி கொண்டிருந்த கரிசனை பின்வந்த நாட்களில் கூருணர்வு அற்ற சில ராஜதந்திரிகளின் செயல்களால் இந்திய வகிபாகத்தில் பின்னடைவுகளை ஏற்படுத்தியது.

அதன் விளைவாகவே முள்ளிவாய்க்கால் வரையிலான மிகமோசமான இனப்படுகொலை வரையும் ரத்தமும் சதையுமாக எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் நடைபெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அன்றே சரியான திசையில் சிந்தித்து இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஈழதேசம் அவசியமென இந்திய கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்திருந்தால் இன்று சீன தேசத்தால் ஏற்படுகின்ற நெருக்கடிகளின் விளைவுகள் அதே சிந்தனைப் போக்கை கிளர்த்தியிருக்கும் தேவைப்பாடு எழுந்திருக்காது.

எப்பொழுதும் இந்தியாவே எங்களை பாதுகாக்க வேண்டும் என்பதும், இந்தியாவின் கேந்திர நலனைப் பாதுகாக்க வேண்டியது ஈழத்தமிழர் தேசமே என்பதும் ஏற்கெனவே உணரப்பட்ட உண்மை. எனவே ஒருவருக்கொருவர் இணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில் இன்று இந்தியாவும் ஈழ தேசமும் இருக்கிறது.

அத்தகைய காலச்சூழல்களைக் கருதி, இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் 36 ஆண்டுகளுக்கு முன்விட்ட தவறுகளைப் புரிந்துகொண்டு ஈழ தேசத்தைப் பாதுகாக்கவும் அதனூடாக தென்கோடியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு நட்புமிக்க சக்தியாக ஈழத் தமிழரது தாயகத்தை உருவாக்கவும் தயாராக வேண்டும். அதற்கான முதல் நிலை நடுநிலையாளராக இந்தியா தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## 25 வயது...

லுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த இளைஞன் தனது தந்தையுடன் ஏற்பட்ட பிரச்சினையின்போது வாய்த்தர்க்கம் முற்றியதால் தந்தையும் மூத்த சகோதரனும் பொல்லால் அடித்து இக் கொலையினை செய்துள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் மதவாச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 56 வயது மற்றும் 27 வயதுடைய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7)

## 13ஆம்...

பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு பணியகம், நல்லிணக்க அலுவலகம் என எனது அமைச்சின்கீழ் மூன்று நிறுவனங்கள் உள்ளன.

இதன்மூலம் நடமாடும் சேவை என பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் மக்கள் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

டக்ளஸ்தேவானந்தா போன்ற அரசியல் வாதிகள் அடிப்படைவாத நிலைப்பாட்டில் இல்லை, ஒரு சில எம்.பிக்களே 13ஐ முழுமையாக அமுலாக்குமாறு கோரினர்.

இது சம்பந்தமான யோசனைகளை முன்வைக்கவும், அமுலாக்குவதா இல்லையா என்பது குறித்து என்னால் தீர்மானம் எடுக்க முடியாது.

இது பாராளுமன்றத்துக்கு உரிய பணி, அனைத்து கட்சிகளும் இணக்கத்துக்குவரும் விடயத்தை எம்மால் செய்ய முடியும் என நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த 13 ஆவது திருத்தச்சட்டம் அரசியலுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்காக் போராடுகின்றோம் என வடக்கு அரசியல்வாதிகளால் அம்மக்கள் மத்தியில் கருத்து உருவாக்கப்படலாம் என்றார். (ம-7)

## வடமராட்சியில்...

வடமராட்சி முனைப் பகுதியில் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த றோலர் படகு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை இரவு இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ம-7,60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மெகா பவர்
திகதி 15/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1586
Q 08 07 13 63 69
42359

தன நிதானய
திகதி - 2023.09.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1268
P 24 42 46 56 P
Double Chance 04411

Lucky 7
திகதி 15.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0064
L7 இலக்கம் 0 9
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 8 9 5 9 7 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3480
சீட்டிழுப்பு திகதி 15.09.2023
Q 07 27 48 74
Q 26422

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 547
மிதுனம் 14 22 45 61 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/15
சீட்டிழுப்பு இலக்கம் 5238
N 0 9 1 0 7 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2212 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.15 தினம் வெள்ளிக்கிழமை
04 20 45 46 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,890,836.40
91882 884

சனிதா
திகதி 2023.09.15 வெற்றி வாரம் 4373 வர்ணம் செம்மஞ்சள்
01 12 34 51 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,540,148.00
85179 329
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வாரம் 376
2023.09.15
வெற்றி இலக்கங்கள் 07 44 46
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,143,000/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3924 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.15 தினம் வெள்ளிக்கிழமை
21 27 41 42 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,803,296/-
98270 142

கப்ருக
திகதி 2023.09.15 வெற்றி வாரம் 1388 வர்ணம் ஊதா
B 31 08 33 38 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 440,252,894.20
24757 478
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2038
சீட்டிழுப்பு திகதி : 2023.09.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,656,816/-
15 28 44 67 M
54239 455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு தகுந்த பணிபுரியும் மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
(மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது)

**077 864 9878**
**077 634 3103** (Viber)

(17097)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER — Ria — MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5392, 076 315 6470**

12 வருட வெற்றிகரமான சேவையில். JAN/2023

## UK மற்றும் கனடாவில் உயர்கல்வி

**குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி**

எமது விசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

**WEC COLLEGE**
076 715 6502 / 021 720 0989

(17080)

## ACCOUNTING TAMIL & ENGLISH MEDIUM



# BALAKAJEN SIR இன்

சாதனை பாதையில் ...
2022 (2023) உயர்தர வர்த்தக பிரிவில்
JAFFNA DISTRICT RANK

பாராட்டி வாழ்த்துகின்றோம்

**1**

J.ANNE DINUJA
- ACCOUNTING - A
- BUSINESS STUDIES - A
- ECONOMICS - A

யாழ் மாவட்டத்தின் முன்னணி பெறுபேறுகள்
DISTRICT 01 உட்பட 02(கிளி), 03, 04(மன்), 05, 08, 10, 13, 22

இம் முறையும் ACCOUNTING இல் அதி கூடிய A மற்றும் B சித்திகள்

நேரடி மற்றும் ZOOM ஊடாக A/L கணக்கீட்டு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ADMISSION OPEN... 077-452-0043

NEC - JAFFNA, KBK - கந்தர்மடம், கொழும்புத்துறை

ONLINE வகுப்புக்கள்

(17073)

## பொலிஸாரை...

ஆவரங்கால் பகுதியை சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைக்கு வருமாறு. பொலிஸார் அழைப்பு விடுத்த போதிலும். அவர் பொலிஸ் நிலையம் செல்லாததால். நேற்று முன்தினம் குறித்த நபரை கைது செய்வதற்கு. பொலிஸார் குறித்த நபரின் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

அதன் போது அவர் பொலிஸாருடன் முரண்பட்டு. பொலிஸாரை தாக்கிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

(மு-7)

## தேவை

சாரதி A/D 40 வயதுக்கு மேல்
விற்பனை உதவியாளர் ஆண் 25 வயதுக்கு மேல். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(17100)

**077 978 9223**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (17096)

**077 728 6061**

## மாடி வீடு விற்பனைக்கு

காரைநகர் இடைப்பிட்டியில் உள்ள மாடி வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணியும் வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு

(17066)

**077 088 6126**
**076 645 8455**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

(C-7265)

## WORK IN UK

**WORK PERMITS**
**CONSTRUCTION WORKERS**

- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

- ✓ BRICK LAYERS
- ✓ SHUTTERING CARPENTERS
- ✓ SHUTTERING JOINERS
- ✓ STEEL FIXERS
- ✓ ELECTRICIANS
- ✓ PLUMBERS
- ✓ STEEL ELECTORS FOR STRUCTURES



போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

மேசனவர்களுடன், கட்டுமானத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்

CIMS COLLEGE **0777-068-777**

(C-7265)

## விசா விண்ணப்பம்

**கனடா பிரான்ஸ் லண்டன்**

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**ருமேனியா, கனடா வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத் தரப்படும்**

**விசா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை 10.30 – 4.30 மணிவரை நடைபெறும்**

**நடைபெறும் இடம் : Loyalas Wedding hall**
**No.10, ST.Patrick Road** (சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

குறிப்பிட்ட விசா மாத்திரம் கையிருப்பில் உள்ளது.
முற்பதிவுகள் அவசியம். முற்பதிவுகள் இல்லாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்
தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.
முற்பதிவுகளுக்கு

**NSA Group of Company (Pvt) Ltd.**
197, Main Street, Jaffna.
அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
(நிபந்தனைக்குட்பட்டது) (17095)

**077 266 6429, 021 221 0599**
**077 877 4838**

## காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு நவற்கிரி சந்திக்கு அருகில் 14 பரப்புத் தோட்டம் விற்பனைக்கு.
இரண்டு பேர் இரண்டாக்கி வீடும் கட்டலாம்.

(17085)

**077 706 6487**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=



(17019)

T.P: **077 544 8503**

# கொழும்பு விலையில்

**யாழ்ப்பாணத்தில் கோழி மலிவு விற்பனை**



- ❖ 1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி விலை 1250/-
- ❖ 1 Kg பேரன்ஸ் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
- ❖ கல்பேட் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1 Kg 1250/-
- ❖ விறாத்து கோழிக்குஞ்சுகள், சேவல், ஊர்கோழி

**இவை அனைத்தும் வியாபாரிகளுக்கு, ஹோட்டல் தேவைப்படுபவர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.**

(17098)

தொடர்பு : **நியு சிற்றி பாம்**
**நியு சிற்றி கோழிக்கடை**

இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 160 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- ● வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- ● நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ● யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ● இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ● ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- ● A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- ● தரகர் தேவையில்லை
- ● நன்னீர் ஊற்று.

(17098)

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.321, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org